## எனக்குள்ள உரிமைகள் யாவை?

இருப்பில் வைக்கப்பட்டிருக்கும் உங்களைப் பற்றிய உடல்நலத் தகவல்கள் யாவை, அவை எவ்வாறு மற்றும் ஏன் சேகரிக்கப்பட்டன, மற்றும் அவை எதற்காகப் பயன்படுத்தப்படுகின்றன என்று தெரிந்துகொள்வதற்கான உரிமை உங்களுக்குள்ளது.

உங்களைப் பற்றிய உடல்நலப் பதிவுகளைப் பார்க்க வேண்டும் என்றும், அவை தவறாக இருந்தால் அவற்றைத் திருத்த வேண்டும் என்றும் கேட்பதற்கான உரிமை உங்களுக்குள்ளது. உங்களைப் பற்றிய உடல்நலத் தகவல்களை இன்னொரு சுகாதார சேவை வழங்குநருக்கு அனுப்பி வைக்கவேண்டும் எனவும் நீங்கள் கேட்கலாம். இந்த வேண்டுகோள்கள் மறுக்கப்பட்டால், எழுத்துமூலமான விளக்கம் தரப்படவேண்டிய தகைமை உங்களுக்குள்ளது.



மேலதிகத் தகவல்களுக்கு அல்லது ஒரு முறைப்பாட்டை இணையத் தளப் படிவத்தில் நிரப்புவதற்கு நீங்கள் பார்க்க வேண்டியது: **hcc.vic.gov.au**

உங்களது முறைப்பாட்டினைப் பற்றிக் கலந்துரையாட திங்கள் முதல் வெள்ளி வரை முற்பகல் 9.00 மணியிலிருந்து பிற்பகல் 5.00 மணி வரை **1300 582 113**-ஐ அழையுங்கள்.

HEALTH COMPLAINTS COMMISSIONER



HEALTH COMPLAINTS COMMISSIONER

# எனது உடல்நலப் பதிவேடுகள் எனது உரிமைகள்

Tamil | தமிழ்

பாதுகாப்பானதும் நெறி முறையானதுமான மருத்துவப் பராமரிப்புக்கான ஆதரவு வழங்கல்



## என்னைப் பற்றிய உடல்நலத் தகவல்களை இருப்பில் வைத்திருப்பது யார்?

பாடசாலைகள், காப்பீட்டாளர்கள் மற்றும் அரசாங்க முகமைகள் போன்ற சுகாதாரம் சாராத சேவை வழங்குநர்களும், மருத்துவமனைகள் மற்றும் பல்மருத்துவர்கள் போன்ற சுகாதார சேவை வழங்குநர்கள் போன்ற அனைவரும் உடல்நலத்தைப் பற்றிய தகவல்களைச் சேகரிப்பர். உங்களுடைய மருத்துவ வரலாறுகள், சோதனை முடிவுகள், நோய் விடுப்புச் சான்றளிப்புகள், மருந்துப் பட்டியல்கள் மற்றும் அநேக விடயங்களை இவர்கள் இருப்பில் வைத்திருக்கலாம். இப் பதிவுகளை அவர்கள் உருவாக்கியிருந்தால், அவை அவர்களுக்குச் சொந்தம்.

## அவர்களது கடப்பாடுகள் என்ன?

உங்களுடைய சம்மதத்தோடு மட்டுமே உடல்நலத் தகவல்கள் சேகரிக்கப்படவேண்டும், மற்றும் அவை சேகரிக்கப்பட்ட நோக்கத்திற்காக மட்டுமே அவை பாவிக்கப்படவேண்டும். சம்பந்தப்படாத நோக்கத்திற்காக அதைப் பாவிக்க, உங்களுடைய அனுமதி அவர்களுக்குத் தேவை.

அவர்களது தகவல்கள் துல்லியமானவையாகவும், நடப்புநாள் வரைக்கும் சரியானவையாகவும், இவற்றை யார் சேகரிக்கிறார்களோ அவர்களது காரியத்திற்கு ஏற்றவையாகவும் இருத்தல் வேண்டும். உங்களது அந்தரங்கத் தன்மையைப் பாதுகாப்பதற்காக இத் தகவல்களை அவர்கள் பாதுகாப்பான முறையில் இருப்பில் வைக்கவும், இடமாற்றம் செய்யவும், இறுதியில் இல்லாமல் செய்யவும் வேண்டும். உங்களுடைய சேவை வழங்குநர் இடம் மாறினால், அல்லது தனது வர்த்தகத்தினை மூடினால், பொது அறிவிப்பு ஒன்றினை அவர்கள் வெளியிட வேண்டும்.

## எனது பதிவுகளை என்னால் எப்படி அணுக இயலும்?

உங்களுடைய உடல்நலப் பதிவுகளை வைத்திருப்போருடன் நீங்கள் தொடர்பு கொள்வது முதல் படி. அவர்களது மறுமொழியில் உங்களுக்குத் திருப்தியில்லை என்றால், நீங்கள் முறைப்பாடு ஒன்றினைச் செய்யலாம்.

விக்டோரிய மாநிலத்தில் உடல்நலத்தைப் பற்றிய தகவல்களை இருப்பில் வைத்திருக்கும் சுகாதாரக் கவனிப்புச் சேவை வழங்குனர்கள் அல்லது எவ்வொரு தனியார் அமைப்பினரையும் பற்றிய முறைப்பாடுகளை Health Complaints Commissioner (சுகாதார முறைப்பாட்டு ஆணையர்) கையாள்வார்.

பொது அமைப்புகளால் உடல்நலப் பதிவேடுகள் கையாளப்படும் விதம் குறித்த முறைப்பாடுகள் 'தகவல் சுதந்திர ஆணைய'(Freedom of Information Commissioner)ருக்கு அனுப்பப்படும்.

உங்களுடைய உடல்நலப் பதிவுகளை அணுக, அல்லது அவற்றில் திருத்தம் செய்யவும், விளக்கங்கள், மன்னிப்புக் கோரல்கள் மற்றும் தொகை மீளளிப்புகளைப் பெறவும், அல்லது ஒரு சேவை நிறுவனம் உடல்நலத் தகவல்களைக் கையாளும் விதத்தினை மாற்றவும் கூட எமது அலுவலகத்தினால் உங்களுக்கு உதவ இயலும்.

எமது சேவைகள் இலவசமானவை, இரகசியமானவை மற்றும் பாரபட்சமற்றவை.

**எம்முடன் தொடர்பு கொள்க**


மேலதிகத் தகவல்களுக்கு அல்லது ஒரு முறைப்பாட்டை இணையத் தளப் படிவத்தில் நிரப்புவதற்கு நீங்கள் பார்க்க வேண்டியது: **hcc.vic.gov.au**

உங்களது முறைப்பாட்டினைப் பற்றிக் கலந்துரையாட திங்கள் முதல் வெள்ளி வரை முற்பகல் 9.00 மணியிலிருந்து பிற்பகல் 5.00 மணி வரை **1300 582 113**-ஐ அழையுங்கள்.

Level 26, 570 Bourke Street, Melbourne Victoria 3000 எனும் விலாசத்தில் எம்மைச் சந்தியுங்கள், அல்லது எமக்கு எழுதுங்கள்.

செவிப்புலனற்ற அல்லது காது கேட்பதில் பலவீனமான அல்லது பேச்சில் தடுமாற்றம் காணப்படின்?
**relayservice.gov.au**

மொழிபெயர்த்துரைப்பாளர் தேவைப்படின்:
TIS National: **131 450**


இத் தகவல்கள் பொதுவானவை, சட்ட ஆலோசனை என்ற நோக்கத்தில் தரப்பட்டவை அல்ல